இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN


Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 141 இதழ் : 16 திகதி: 10.09.2017 விலை : 20.00

## இறை அழைத்தலின் ஊற்றாக திருப்பாலத்துவ சபை அமைகின்றது

### – இணைப்பாளர் ஒன்றுகூடலில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை –




தேசிய ரீதியில் திருப்பாலத்துவ சபையின் மறை மாவட்ட இயக்குநர்கள், மறைக்கோட்ட இணைப்பாளர்களாகப் பணியாற்றும் குருக்கள், துறவிகளுக்கான கருத்தரங்கம் ஒன்று கண்டி தேசிய குருமடத்தில் புரட்டாதி 04ம் திகதி முதல் 06ம் திகதி வரை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்து கருத்துரை வழாங்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், சிறுவர்களின் விசுவாச உருவாக்கம் இன்று முக்கியமான ஒன்றாகவுள்ளது. எதிர்காலத் திருச்சபையின் விசுவாசம் இவர்களினால் தான் கட்டி எழுப்பப்பட வேண்டியுள்ளது.

குழந்தைகளின் விசுவாச வாழ்வினால் பெற்றோர் புனிதத்துவம் எய்துகின்றனர். ஆகவே சிறாரை பொறுப்புடன் விசுவாச நெறியில் வளர்க்கவேண்டும். இப்பணிகளையே திருப்பாலத்துவசபை வழியாகத் திருச்சபை எதிர்பார்த்து நிற்கின்றது.

திருப்பாலத்துவ சபை மழலைகளில் உருவாக்கத்தில் ஊக்குவிப்பாளர்கள், இணைப்பாளர்கள், பங்குத்தந்தையினர், பங்குக் குழுமம், பாடசாலை பாடவிதானம் என்பன முக்கிய வகிபாகம் வகிக்கின்றது எனவும் தெரிவித்தார். இக் கருத்தமர்வில் யாழ். மறைமாவட்டத்திலிருந்தும் குருக்கள், துறவிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## குறிப்பிட்ட சமூகத் தொடர்பு சாதன மோசடி கத்தோலிக்க ஆயர்களின் மாநாடு அறிக்கை

இயேசுக் கிறிஸ்துவின் உருவத்தை அரசியல் வாதியின் முகத்தோடு இணைத்து மின்னணு ஊடகங்களினூடாகப் பரவலாக்கப்பட்டு வருவது கத்தோலிக்க சமூகத்தில் குழப்பத்தை உருவாக்கியுள்ளது. என இலங்கை ஆயர் மன்றம் அறிக்கை ஒன்றை இவ்வாரம் வெளியிட்டுள்ளது.

மேலும் இவ்வறிக்கையில் உலகளாவிய அளவில் ஆயிரக்கணக்கான மக்களால் வழிபட்டு வரும் கிறிஸ்துவத்தின்ஸ்தாபகரை. பண்புநயமற்ற முறையில் அவமதிக்கும் செயற்பாட்டிற்கு காரணமானோரின் செயல் மிகக் கோழைத்தனமானது.

கடந்த 2000 மாம் ஆண்டு காலளவு, இயேசுவின் நாமத்துக்காக உயிர்த்தியாகம் செய்த பலர் சாட்சியம் பகிர்ந்துள்ளனர்.

(தொடர்ச்சி 08ம் பக்கம்)

## வில்லா விசென்சியோவில் திருத்தந்தை பிரான்சிஸ்



செப்டம்பர் 08, இயேசுவின் தாய் கன்னி மரியின் பிறந்தநாள். வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை விழா. இந்நாளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்.

தனது இருபதாவது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணமாக, கொலம்பிய நாட்டிற்கு, செப்டம்பர் 06, இப்புதன்கிழமை மாலையில் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்,

(தொடர்ச்சி 08ம் பக்கம்)

## ஆன்மீக அறிவைத் தூண்டும் செயற்பாட்டில் தனியார் கல்வி நிறுவனங்கள் ஒத்துழைப்பு

யாழ். மாவட்டத்தில் ஆன்மீக நன்நெறியில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்காக வாராந்தம் வெள்ளிக்கிழமை மாலையும் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் தனியார் கல்வி நிறுவனங்களை நிறுத்தி மாணவர்களுக்கான அறநெறி. மறைக்கல்வியில் ஈடுபடத் தூண்டும்படி யாழ் மறைமாவட்ட செயலரால் சகல பிரதேச செயலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

இக்கருத்தை முன்வைத்து யாழ் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கருத்தமர்வில் யாழ் பிரதேச செயலர் பொ.தயானந்தா அவர்களும் மறைக் கல்வி இயக்குனர் அருட்பணிபெனட் அடிகளாரும் உலாமா சபைத் தலைவர் மௌலவி A.M.A அசீன் அவர்களுடன் அறநெறி மறைக்கல்வி ஆசிரியர்களும் தனியார் கல்வி நிறுவனத்தினரும் பூரண ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்த முன்வந்தனர்.

வெள்ளிக்கிழமை மாலை மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை நேரங்களில் மாணவர்கள் மறைக் கல்வி அறநெறிகளில் பங்குபெற பெற்றோர்கள் அக்கறையுடன் ஆன்மீக அறிவைத் தூண்டி நல்லொழுக்க சமூகம் மலர ஒத்துழைக்குமாறு பிரதேச செயலர் வேண்டுகோள் விடுத்தார்.

## தேசிய கத்தோலிக்க இளையோர் வாரத்தை முன்னிட்டு இளையோருக்கான சிறப்புக் கருத்தமர்வு

தேசிய கத்தோலிக்க இளையோர் வாரத்தை முன்னிட்டு 31.08.2017 அன்று மாலை 6மணி முதல் 9 மணி வரை இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் பங்குத்தந்தை இ.ம.யேசுரட்ணம் அடிகளாரின் ஏற்பாட்டில் புனித டொன் பொஸ்கோ இளையோர் மன்றத்தினருக்கான சிறப்புக் கருத்தமர்வு இடம் பெற்றது. இதனை யாழ்ப்பாண அக-வொளி இயக்குனர் அருட்தந்தை ஸ்ரலின் அடிகளார் மேற்கொண்டார்.

இளையோரின் வாழ்க்கை முறை எதிர்காலம் நோக்கி இருக்க வேண்டும் என்றும், ஏழைகளாக, மாற்றுத் திறனாளிகளாக சாதாரண, ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள் கூட தமது இளமைப் பராயத்தில் சாதிக்கத் தவறவில்லை என்றும் அவர்களின் முன்மாதிகையான பண்புகள் பற்றியும், இன்று இளையோராக இருக்கும் நாம் எம்மிடமுள்ள திறமைகள், ஆற்றல்களை இனங்கண்டு தீயவற்றை விலக்கி நல்லவற்றை வளர்த்து நாமும் எமது சமூகமும் ஏன் முழு உலகுமே பயன் பெறக்கூடியவர்களாக நாம் மாறவேண்டும் எனவும் இன்னும் எதிர்கால குடும்ப வாழ்விற்குத் தேவையான சில அம்சங்களையும் அழகான கருத்துரை மூலமாகவும் அனுபவக் கதைகள் மூலமாகவும் ஒளிப்படங்கள் மூலமாகவும் தெளிவாக எடுத்துக்காட்டி நல்வாழ்விற்கு வழிகாட்டினார்.



மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயித்தியமலை சதாசகாய அன்னை ஆலய 63 ஆவது வருடாந்தப் பெருவிழாத் திருப்பலியை 03.09.2017 அன்று யாழ். ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். யாழ். ஆயரோடு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு பொன்னையா யோசப் ஆண்டகையும் திருத்தலப் பரிபாலகரும் இணைந்து கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## செய்தி ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் பேரவை

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் (New Media) நவீன ஊடகங்கள் ஆகிய செய்தி ஊடகங்களைக் கட்டுப்படுத்த சுயாதீனப் பேரவை ஒன்றை அமைப்பதற்கான வரைபு ஒன்றை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. அந்த வரைபு தற்போதைய நிலையில் அவசியமானதுதான். ஆனால் செய்திகளைத் தர நிர்ணயம் செய்வது என்ற போர்வையில் செய்தியாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் போக்குகளை ஏற்க முடியாது.

இந்த சுயாதீனப் பேரவையை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களில் இடம்பெற்றுள்ளன. ஆனால் இந்தக் கலந்துரையாடல்கள் யுத்தகாலத்தில் ஒன்றிணைந்து செயற்பட்ட ஊடக அமைப்புகள், மூத்த ஊடகத்துறையினர் ஆகியோருடன் பேசாமல் வேறு வகையான அணுகுமுறை ஒன்றைப் பின்பற்றி இந்தப் பேரவைக்கான வரைபு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கொழும்பு இதழியல் கல்லூரி மண்டபத்தில் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் எற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.

அந்தக் கலந்துரையாடலில் செய்தி ஊடகங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் குறித்துப் பேசப்பட்டிருக்கின்றது. ஆனால் செய்தி ஊடகங்களை தரம்பிரித்து அந்தக் கட்டுப்பாடுகளை கொண்டுவரவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் நவீன ஊடகங்கள் NewMedia எனப்படும் பல இணையச் செய்தித் தளங்கள் இயங்குகின்றன. அவற்றில் சிலசெய்தித் தளங்கள் தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் ஊடக ஒழுக்க விதிகளுக்கு மாறாகச் செய்திகளை வெளியிடுகின்றன. அவ்வாறான செய்தித் தளங்களைக் கட்டுப்படுத்த அல்லது விசாரணை நடத்தி வெளியிடப்பட்ட செய்தி, சேகரிக்கப்பட்ட மூலத்தைக் கேட்டு அறிந்து சட்ட நடவடிக்கை எடுப்பதில் தவறில்லை. அவ்வாறு விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனை ஊடக ஜனநாயக மீறலாகவும் கருதமுடியாது.

ஆனால் பிரதான ஊடகங்களை (Mainstream media) அவ்வாறு கட்டுப்படுத்தமுடியாது. குறிப்பாக அந்த ஊடகங்களில் வெளிவரும்அரசியல்பொருளாதாரம்சார்ந்தசெய்திகள்கட்டுரைகள் விமர்சனங்கள் குறித்து செய்தியின் மூலத்தை விசாரணைக்கு உட்படுத்தமுடியாது. பிரசுரிக்கப்பட்ட செய்தி ஒன்றின் மூலம் தொடர்பாக குறித்த அந்தச் செய்தி எழுதிய செய்தியாளரைத் தவிர வேறுயாருக்கும் செய்தி எடுக்கப்பட்டமூலம் தெரியவேண்டும் என்ற அவசியம் இல்லை. அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் கூட குறித்த அந்தச் செய்தி தொடர்பாக செய்தி எழுதிய செய்தியாளனிடம் செய்தியின் மூலத்தைக் கேட்டு அறிய முடியாது.

ஆகவே செய்தி ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது என்ற போர்வையில் பிரதான செய்தி ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் குறித்து உயர் நீதிமன்ற விசாரணையில் கூட செய்தியின் மூலத்தைக் கேட்கமுடியாது என்ற விதிமுறைகளை அமைக்கப்படவுள்ள சுயாதீனப் பேரவை பின் பற்றவேண்டும். வெறுமனே சுயாதீன பேரவை என்ற போர்வையில் அரசாங்கத்தையும் அரசியல்வாதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகளைக் காப்பாற்றும் நடவடிக்கைகளை அங்கீகரிக்க முடியாது. இந்த விடயங்களை ஊடக அமைப்புகள் வலியுத்தி வருகின்றன.

வெளியிடப்பட்டுள்ள வரைபில் செய்தியாளர்களின் சுதந்திரம் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. ஆனாலும் செய்தி ஒன்று தொடர்பாக விசாரணை நடைபெறும் போதும் நீதிமன்றத்தில் செய்தியின் மூலத்தை செய்தியாளர் வெளியிடவேண்டும் என்ற விதி முறை ஏற்புடையதல்ல.

அதேவேளை, இயேசுக்கிறிஸ்துவின் உருவத்தை அரசியல்வாதியின் முகத்தோடு இணைத்து மின்னணு ஊடகங்களின் ஊடாகப் பரவலாக்கப்பட்டு வருவது கத்தோலிக்க சமூகத்தில் குழப்பத்தை உருவாக்கியுள்ளது என இலங்கை ஆயர் மன்றம் அறிக்கையொன்றை இவ்வாரம் வெளியிட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூக ஊடகங்களைக் (Social Media) கட்டுப்படுத்த முடியாத பிரச்சினை உலகலாவிய ரீதியில் காணப்படுகின்றது என்பது இன்றைய நிலையாகின்றது.

ஒழுக்கம், பொறுப்பு, சமூக உணர்வுகள் என்பதைத் தாண்டி ஒருவரை ஒருவர் சீண்டிவிடுகின்ற நிலையும் குடும்ப பிரச்சினைகளை அல்லது தனிப்பட்ட முரண்பாடுகளைத் தெருவுக்கு இழுக்கின்ற செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. ஆகவே சமூக ஊடகங்களையும் கட்டுப்படுத்த சட்டம் அவசியம்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## ஆயர்கள் மாமன்றத்தின் தயாரிப்புப் பணிகளில், இளையோர்

இளையோரை மையப்படுத்தி, 2018ம் ஆண்டு, வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்தின் தயாரிப்புப் பணிகளில், இளையோரை இன்னும் அதிகமாக ஈடுபடுத்தும் முயற்சிகளை, மாமன்ற அலுவலகம் மேற்கொண்டு வருகிறது என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

"இளையோர், நம்பிக்கை, அழைத்தலைத் தெளிதல்" என்ற தலைப்பில், 2018ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்தின் தயாரிப்புகள் குறித்து, மாமன்றத் தலைமைச் செயலர்,கர்தினால் லொறென்சேபால் திஸ்ஸேரி (Lorenzo Baldisseri) அவர்கள், வத்திக்கான் வானொலிக்கு அளித்தபேட்டியில் இவ்வாறு கூறினார்.

இளையோரிடையே ஊடக வடிவங்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருவதை மனதில் கொண்டு, youth.synod 2018.va என்ற வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறிய கர்தினால் பால்திஸ்ஸேரி அவர்கள், மாமன்ற துவக்கநிலை ஏட்டினைத் தயாரிக்க, பல்லாயிரம் இளையோரின் கருத்துக்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டார்.

நடைபெறவிருக்கும் மாமன்றம், ஆயர்களின் முதன்மையான பங்கேற்பை பெற்றிருக்கும் என்றாலும், இந்த மாமன்றத்தில் பார்வையாளர்களாகப் பங்கேற்கும் இளையோர், மாமன்றத்திற்கு வெளியே நிகழும் பல்வேறு குழுப் பரிமாற்றங்களில் முழுமையாகப் பங்கேற்பர் என்று கர்தினால் பால்திஸ்ஸேரி அவர்கள் விளக்கிக் கூறினார்.

உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு முன்னேற்பாடாக, செப்டம்பர் 11 முதல் 15 முடிய இயேசு சபைத் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொது அவை அரங்கத்தில், பன்னாட்டு இளையோரின் கருத்தரங்கு ஒன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## நம்பிக்கையிழந்த மக்களுக்கு அன்னை தெரேசா போன்று நம்பிக்கையளிப்போம்

"மனத்தளர்ச்சியடைந்தோர், மற்றும், புரிந்துகொள்தலும், கனிவும் தேவைப்படுவோர் ஆகியோருக்கு, அன்னை தெரேசா போன்று, மகிழ்வு மற்றும் நம்பிக்கையின் வாய்ப்புக்களைத் திறந்து விடுவோமாக" எனக் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

செப்டம்பர் 5 புனித அன்னை தெரேசா அவர்களின் திருநாள் சிறப்பிக்கப்பட்டதை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியில், புனித அன்னை தெரேசா அவர்களின் எடுத்துக்காட்டான வாழ்வைப் பின்பற்று மாறுகேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், புனித அன்னை தெரேசா அவர்கள், இறையடி சேர்ந்ததன் இருபதாம் ஆண்டு நிறைவு நாள், கொல்கத்தா புனித அன்னை தெரேசா அருள்சகோதரிகள் இல்லத்தில், விழாத் திருப்பலி நிறைவேற்றினார், இந்தியத் திருப்பீடத் தூதர், பேராயர் ஜாம்பத்திஸ் தாதிகுவாத்ரோ.

இன்னும், புனித அன்னை தெரேசா அவர்களை, கொல்கத்தா உயர்மறை மாவட்டத்தின் துணைப் பாதுகாவலராக அறிவிக்க விருப்பதாக, அவ்வுயர் மறைமாவட்டத்தின் பேராயர் தாமஸ் டிசூசா அவர்கள் கூறியுள்ளார்.

செப்டம்பர் 6, மாலை 5.30 மணிக்கு, கொல்கத்தா செபமாலை அன்னை பேராலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில், பேராயர் திகுவாத்ரோ அவர்கள், புனித அன்னை தெரேசாவை, கொல்கத்தா உயர் மறை மாவட்டத்தின் துணைபாதுகாவலராக அறிவிப்பார் எனக் கூறினார், பேராயர் டி சூசா.

இந்நிகழ்வு குறித்து, IANS செய்தி நிறுவனத்திடம் பேசியபேராயர் டி சூசாஅவர்கள், ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் ஒருபாதுகாவலர் உள்ளார், இவ்வழியில், புனிதபிரான்சிஸ் சவேரியார், கொல்கத்தா உயர்மறை மாவட்டத்தின் பாதுகாவலராகப் போற்றப்படுகிறார், தற்போது, புனித அன்னை தெரேசா அவர்களை, துணை பாதுகாவலராக அறிவிக்கவுள்ளோம் என்று தெரிவித்தார்.

கொல்கத்தா போன்ற நகருக்கும், கொல்கத்தா உயர்மறை மாவட்டத்திற்கும் புனித அன்னை தெரேசா அவர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர், அவரின் பரிந்துரையை இறைஞ்சுவதற்கு விரும்புகின்றோம் என்று, மேலும் கூறினார், பேராயர் தாமஸ் டிசூசா.

## பிறருக்கு உதவுகின்ற மனப்பான்மையில் கவனம் செலுத்துமாறு பன்னாட்டு இளையோரிடம் திருத்தந்தை பிரான்சிஸ் வேண்டுகோள்.

நவீன சமுதாயத்தில் நிலவுகின்ற தன்னலப் போக்குகளிலிருந்து விடுபட்டு, பிறருக்கு உதவுகின்ற மனப்பான்மையில் கவனம் செலுத்துமாறு, பன்னாட்டு இளையோரிடம் கேட்டுக் கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நாம் வாழ்கின்ற கலாசாரம் மிகவும் தன்னலமுள்ளதாய், எப்போதும் தன்னைப் பற்றியே நினைத்துக்கொண்டு, பிறரைப் புறக்கணிப்பதாக உள்ளது எனவும் கூறியத் திருத்தந்தை, தன்னையே அன்பு கூருகின்றபோக்கு சோகத்தையே உருவாக்கும் எனவும் கூறினார்.

கத்தோலிக்க ஷலோம் குழுமத்தைச் சார்ந்த இளையோர் மற்றும் குடும்பங்கள் என ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை அருளாளர் ஆறாம் பவுல் அரங்கத்தில் இத்திங்களன்று சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அக் குழுமத்தின் மூன்று இளையோர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னார்.

சிலே நாட்டைச் சேர்ந்த ஹுவான் என்பவர் கேட்டகேள்விக்குப் பதிலளித்த திருத்தந்தை, இறை இரக்கத்தின் நற்செய்தியைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதற்கு ஒருவர் தன்னலம் துறக்கவேண்டியது இன்றியமையாதது என்று கூறினார்.

மேலும் திருஅவையின் பணியிலும் வாழ்விலும் இளையோரின் பங்குபற்றி பிரான்ஸ் நாட்டு ஓர் இளம்பெண்ணும் போதைப்பொருளுக்கு பல ஆண்டுகள் அடிமையாகி தற்போது புதுவாழ்வு வாழ்கின்ற பிரேசில் நாட்டு இளைஞர் ஒருவரும் திருத்தந்தையிடம் கேள்விகளைக் கேட்டனர்.

போதைப்பொருட்கள் மக்களின் வாழ்வை எவ்வாறு அழிக்கின்றன என்பதை விளக்கிய திருத்தந்தை வயது முதிர்ந்தவர்களை மதித்து நடக்குமாறும் அறிவுறுத்தினார்.

பிரேசில் நாட்டின் வடகிழக்கிலுள்ள Fortaleza நகரில், 1980களின் ஆரம்பத்தில் ஷலோம் குழுமம் தொடங்கப்பட்டது. தற்போது பலநாடுகளில் பரவியுள்ள இக்குழுமத்தில் ஏறத்தாழ 3,800 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். தியானம், ஒன்றிப்பு மற்றும் நற்செய்தி அறிவிப்பில் இவர்கள் கவனம் செலுத்துகின்றனர்.



எல்லாத் தலைமுறையினரும் பேறுடையாள் எனப் போற்றும் பெருமை மிக்கவர் நம் அன்புத்தாய் அன்னை மரியா. உருவமற்ற வார்த்தைக்கு மானிட உருக்கொடுத்து மக்கள் கண்முன் நிறுத்திய பெருமை கன்னிமரியாளுக்குரியது. இன்று எங்கு நோக்கினும் மாதா கோவில்கள் எம் மதத்தவராயினும் கத்தோலிக்க கிறிஸ்தவ கோவில்களை மாதா கோவில் என்றே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

ஒரு பிள்ளையைப் பராமரிக்க தாய் அவசியம். அதுபோல கிறிஸ்தவர்களாகிய நமக்கு தேவ அன்னை அவசியம். அன்னையை கடவுள் தம் மகனுக்குத் தாயாகப் பரிசளிக்கிறார். மகனாகிய கிறிஸ்து அன்னையை நமக்குத் தாயாகப் பரிசளித்துள்ளார். இன்று பரலோக, பூலோக அரசியாய் திகழும் நம் அன்னை உலக மக்கள் தஞ்சம் அடையும் ஓர் புனித ஆலயமே.

## அன்னை மரியாளின் பிறந்த தினம்
## புரட்டாதி - 08

### விவிலியம் காட்டும் அன்னை மரியா

**பழைய ஏற்பாட்டில்**

ஒரு சில இடங்களில் அன்னை பற்றிய மறைமுக வெளிப்பாட்டைக் காணலாம்.

தொ.நூ. : உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவோம்.

எசாயா 7:24 - இதோ! கருவுற்றிருக்கும் இந்த இளம்பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள்.

| | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 1. குடும்பம் பற்றிய குறிப்புகள்: | 13:55 | 8 : 3 | | |
| 2. உறவினர் பற்றிய தர்க்கம்: | 12:46-56 | 3 :211 | 8: 19-21 | |
| 3. தாய்மைப் பேறு | | 31- 25 | 11:27 | |
| 4. கானாவூர் திருமணம் | | | | 2:1-12 |
| 5. சிலுவை அடியில் மரியா | | | | 18:26-27 |
| 6. குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் | 1 - 2 | | 1 - 2 | |

### யார் இந்த மரியன்னை

சுவக்கீன் அன்னம்மாதான் அன்னை மரியாவைப் பெற்றெடுத்த பேறுபெற்ற பெற்றோர். நாசரேத் மரியாயின் ஊர். சென்ம பாவம் இன்றிப் பிறந்தவர் தான் அன்னை மரியா.

# அன்னை ஓர் ஆலயம்

### அன்னை அருள் நிறைந்தவள்

"நாசரேத்தில் வாழ்ந்த இளம் கன்னிப்பெண் மரியா. வானதூதர் கொண்டு வந்த மங்கள வார்த்தை நற்செய்திக்கு "ஆகட்டும்" என்ற நம்புதலை மனப்பூர்வமாகத் தந்தவுடன் அவர் உடற்கூறு அமைப்பில் மட்டும் இறைவனுக்குத் தாயாகவில்லை. இயற்கையோடு மேம்பட்டு, அவர் பெற்ற அருள் காரணமாக, அவர் உலக மக்கள் அனைவருக்கும் தாயாகத் திகழ்கிறார்:

(திருத்தந்தை 12ம் பத்திநாதர்)

### மரியாவின் கன்னிமையும், மோசே செடியும்

"மரியாவின் கன்னிமை எரியும் புதர்செடிக்கு ஒப்பானது. செடி எரிந்தாலும் அது சாம்பலாகிவிடவில்லை. அதைப்போல அன்னை மரியா இயேசுவைப் பெற்றாலும் அவரது கன்னிமை அழிந்துவிடவில்லை.

## தேவதாய் ஆனது எப்படி?

மரியா இளம் மங்கையாய் இருந்தபோது சூசை என்பவரை மணம் முடிக்க நிச்சயதார்த்தம் செய்யப்பட்டது. அவ்வேளையில், 06 ஆம் மாதத்தில் கபிரியேல் தூதர் மரியாவுக்குத் தோன்றி "அருள் நிறைந்தவளே வாழ்க! ஆண்டவர் உம்முடனே பெண்களில் எல்லாம் பேறுபெற்றவள் நீர். ஏனென்றால் உமது திருவயிற்றில் இருந்து உலக மீட்பர் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிறக்கப்போகிறார்" என்றார். மரியாவுக்கு ஒரே கலக்கம்.

ஐயோ! கல்யாணம் ஆகாமல் குழந்தை பிறப்பதா? ஊர் என்ன பேசும் என்ற பயமும் மரியாவுக்கு இருந்திருக்கும். ஆனால், கபிரியேல் தூதர் மரியாவிடம் "கவலைப்படாதே! கடவுளால் எல்லாம் கூடும்" என்றார். உடனே மரியா "நான் ஆண்டவரின் அடிமை. உமது வார்த்தையின் படியே ஆகட்டும்" என்றார். இப்பதிலின்படியாக இறை சித்தத்திற்குப் பணிவுடன் தன்னையே கையளித்தார். அதனால் இயேசுவின் தாயாகி, பெண்களுள் பேறுபெற்றவராகத் திகழ்கின்றார்.

(லூக். 1: 26-33)

## தேவ அன்னை பெற்ற அருள்கள்

தேவ அன்னை அனைத்து அருள்வரங்களையும் பெற்றுச் சிறந்த எழிலரசி. பணி ஆர்தர் சேம்சு தனது நூலில் இதனை விளக்குகிறார். அன்னை பெற்ற அருள்வரங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1) மனித அவதாரத்திற்கு முன்

2) இயேசுவின் மனித அவதாரத்தில் 3) இயேசுவின் மனித அவதாரத்திற்குப் பின்

"பெட்றோலால் இயங்கும் வாகனங்களில் ரிசர்வ் கொல்கலன் ஒன்றுண்டு. முக்கிய கொள்கலத்தில் பெட்றோல் தீர்ந்துவிட்டால், ரிசர்வ் கொல்கலத்திலிருந்து பெட்றோல் வரச்செய்து வாகனத்தை இயக்கலாம். அதைப் போலவே நமது ஆன்ம வாழ்விலும் தமக்கென்று ஒரு ரிசர்வ் கொள்கலம் உண்டு. அதுதான் மரியாவிடம் தஞ்சம் அடைவது. நம்மை நாமே வெறுமையாக்கி சக்தியிழந்து இறைத்தந்தையிடமோ அல்லது கிறிஸ்துவிடமோ பேசுவதற்கு விருப்பமற்ற நெருக்கடியான கட்டத்தில் நாம் நமது விண்ணகத்தாயிடம் மன்றாடலாம். நமக்கு உதவி செய்யக் காத்து நிற்கிறார் நம் அன்னை"

## பரந்தன் பங்கில் இளையோர் தினம்



பரந்தன் பங்கில் இளையோர் தினம் கடந்த 03.09.2017 ஞாயிறு அன்று பங்குத்தந்தை அருட்பணி றெனோல்ட் ஜோர்ஜ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். 'மறைமாவட்ட நிதிமுகாமையாளர் அருட்பணி நேசநாயகம் அடிகளார் கலந்துகொண்டார். அன்றைய தினம் இளையோரின் சிறப்புத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து இளையோர் ஒன்றுகூடலும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## கியூடெக் கரித்தாஸ் ஒழுங்கு செய்த சிறுவர் மகிழ்வூட்டல் நிகழ்வு



கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு அரங்கத்தினரால் சிறுவர் மகிழ்வூட்டல் நிகழ்வு 27.08.2017 காலை 09.00 மணிக்கு J/86 மூர் வீதியில் அமைந்த மதருசா மண்டபத்தில் சித்திர பயிலரங்கு இடம்பெற்றது. சிறுவர் மகிழ்வூட்டலில் பெற்றோரின் ஆர்வமான பங்களிப்புடன் வாராந்தம் நடாத்த தீர்மானித்ததுடன் சிறுவர்களின் மனஉணர்வை நல்வழிகாட்ட பேச்சு, ஓவியம், கட்டுரை, கலைகள் மூலம் சிறுவர்களின் நெருக்கீட்டை களைவதில் பெற்றோர் ஆர்வம் காட்டியதில் சிறுவர் மகிழ்வூட்டலுக்கு களமாக அமைந்தது.



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
# பின்னணி, தோற்றம், வளர்ச்சி

## வடக்கு (யாழ்ப்பாண) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கும், தெற்கு (கொழும்பு) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்குமிடையே இருந்த எல்லை பிரிப்புப் பிரச்சினை.

- அருட்பணி S.V.B.மங்களராஜா -

ஆயர் பெற்றக்கீனியிடம் ஒப்படைக்கப்பட்ட பாரிய நிலப்பரப்பில் உள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்ய போதியளவு குருக்கள் இல்லாமை.

ஆயர் பெற்றக்கீனியிடம் ஒப்படைக்கப்பட்ட பாரிய நிலப்பரப்பில் உள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்ய போதியளவு குருக்கள் இல்லாமை. 1846ம் ஆண்டு டிசம்பர் 17ம் திகதி ஆயர் பெற்றக்கீனியவர்கள் தென்பகுதி (கொழும்பு) அப்போஸ்தலிக்க மாவட்டத்தின் அப்போஸ்தலிக்க முதல்வர் ஆயர் கெய்தானோ அந்தோனியோவின் வாரிசு ஆயராக தொடரும் அதே வேளையில் வடக்கு (யாழ்ப்பாணம்) அப்போஸ்தலிக்க மாவட்டத்தின் பதில் ஆயராக பாப்பரசரால் நியமிக்கப்பட்டமையும் வடக்கு (யாழ்ப்பாணம்) அப்போஸ்தலிக்க மாவட்டத்தில் ஆறு ஒரட்டோரியன் குருக்களே பணியாற்றிக் கொண்டிருந்தமை பற்றியும் அவர்களுள் சிலர் வயது முதிர்ந்தவர்களாகவும் உடல் நலம் குன்றியவர்களாகவும் இருந்தார்கள் என்பது பற்றி முன்னர் பார்த்தோம். அத்துடன் ஒரட்டோரியன் சபைக் குருக்களுக்கும்ஆயர்பெற்றக்கீனிக்கும் இடையில் ஒருபோதும் நல்லுறவு நிலவியிருந்ததில்லை என்றும் பார்த்தோம்.

இரண்டு அப்போஸ்தலிக்க மாவட்ட நிர்வாகப்பிரிவுகளைப் பொறுத்தளவில் ஆயர் பெற்றக்கீனியின் கீழ் வந்த வடக்கு (யாழ்ப்பாண) நிர்வாகப்பிரிவு வடமாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் வடமேல் வடமத்திய மாகாணங்கள் (தும்மன்கடுவ மாவட்டம் நீங்கலாக) உள்ள இடங்கள் எல்லாமாக 13,542 சதுர மைல்பரப்பளவைக் கொண்ட பகுதியாக இருந்தது என்றும் இது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் பாதிக்கு மேல் என்றும் முன்னர் பார்த்தோம்.

எனவே இந்தப்பாரிய நிலப்பரப்பில் உள்ள ஆலயங்களையும், சிற்றாலயங்களையும்கத்தோலிக்கரையும்பராமரிப்பதற்கு ஆயர் பெற்றக்கீனி பொறுப்பெடுத்தபோது இருந்தகுருக்கள்மிகவும் குறைவே. அத்துடன் வடக்கு அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்திற்குப்புத்துயிர் கொடுக்க மறைப்பணியாளர் பற்றாக்குறை இருந்தமையை உணர்ந்த ஆயர் பெற்றக்கீனி ஐரோப்பா பயணமாகி 1847 நவம்பர் 28ம் திரும்பி வந்தபோது மூன்று அமலமரித்தியாகிகள் சபைக்குருக்களுடன் வந்தார் என்றும் பார்த்தோம். ஏற்கனவே வடக்கில் பணியாற்றிக் கொண்டிருந்த 6 ஒரட்டோரியன் சபைக்குருக்களில் மிகுவேல் பிலிப் மஸ்கரேனஸ் எனும் ஒருவரைத்தவிர மற்ற ஐவரும் தெற்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்குச் சென்றனர் என்றும் பார்த்தோம்.

பெற்றக்கீனி ஆயர் அவர்கள் முன்னெடுத்த பாரிய ஆன்மீகப் புனரமைப்புப்பணியைச் செய்ய 3 அமலமரித்தியாகிகள் சபையினருடன் வேறு 6 குருக்கள் மட்டுமேயிருந்தனர் என்றும் பார்த்தோம். அவர்களுள் இரண்டுசிஸ்டர்சியன்சபைக்குருக்களும் மூன்று துறவறசபையெதையும் சாராத மறைமாவட்டக்குருக்களும் எஞ்சியிருந்த கோவா ஒரட்ரோரியன் சபைக் குருவும் அடங்கினர்.

புதிதாக வந்த ஐரோப்பியக் குருக்களுக்கு மக்களின் மொழியறிவும் மற்றும் பண்பாடு கலாசாரம் பற்றிய அறிவும் இல்லாமை பணியை முன்னெடுப்பதில் ஆரம்பத்தில் ஒரு பெரும் பின்னடைவாவேயிருந்தது என்றும் பார்த்தோம்.

வடக்கு அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டம் பரப்பளவில் கூடுதலாக இருந்ததைப் போல கத்தோலிக்கரது எண்ணிக்கையும் கணிசமானதாகவேயிருந்தது. முன்னர் போர்த்துக்கேயர் வெளியேறிய 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தரப்பட்ட புள்ளி விபரத்தின்படி வடக்கில் ஏறக்குறைய 1,10,000 கத்தோலிக்கரும் தெற்கில் 101,000 கத்தோலிக்கரும் இருந்துள்ளனர். பின்னர் ஒல்லாந்தர் வருகையின் பின் இந்த எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தாலும் வடக்கிலும், தெற்கிலும் ஏறக்குறைய சமமான அளவு கத்தோலிக்கர் இருந்ததுடன் நாட்டின் மத்தியிலும் ஓரளவு கத்தோலிக்கர் இருந்துள்ளனர்.


வடக்கைப் பொறுத்தளவில் யாழ்ப்பாணக் குடாநாடு, மன்னார் மாதோட்டப்பகுதி, கிழக்கில் அளம்பில், திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் வடமெற்கே சிலாபம், புத்தளம், ஆகிய வடமேற்குக் கரையோரப்பகுதிகளிலும் கணிசமான கத்தோலிக்கர் வாழ்ந்து வந்தனர். யாழ்ப்பாணக்குடா நாட்டில் கணிசமான கத்தோலிக்கர் வாழ்ந்து வந்தனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடக்கு அப்போஸ்தலிக்க மாவட்டம் முழுவதிலும் பார்க்கும் போது ஒப்பீட்டளவில் கூடுதலான அவற்றுள் சில ஓரளவு நன்கு கட்டப்பட்ட பெரிய ஆலயங்களும் இருந்தன.

இலங்கை முழுவதும் குருக்கள் பற்றாக்குறை ஆயர் பெற்றக்கீனியின் வருகைக்கு முன்னரே இருந்து கொண்டிருந்தது. 1842ல் இருந்து கத்தோலிக்க பொது நிலையினர் அவ்வப்போது ரோமாபுரிக்கு குருக்கள் பற்றாக்குறை பற்றி முறையிட்ட வண்ணமே இருந்துள்ளனர். 1844ல் இலங்கை முழுவதும் 22 கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களே இருந்தனர். அவர்களுள் கணிசமானோர் வயதானோர் என்றும் இனியும் அங்கிருந்து குருக்கள் வரக்கூடிய சாத்தியக்கூறுகளும் இருக்கவில்லையென்றும் பார்த்தோம். 1845ல் சுதேச குருக்களை உருவாக்க ரோமை விசுவாசப்பரப்புதல் சபை இலங்கையில் ஒரு குருமடத்தை ஆரம்பிக்க வற்புறுத்தியும் அப்போஸ்தலிக்க முதல்வர் கேய்த்தானோ அந்தோனியோ ஆண்டகையால் எதுவும் செய்ய முடியவில்லை.

இவ்வேளையில் ஐரோப்பிய குருக்களின் வருகையினால் மறைப் பணிக்கு புத்துயிர் வழங்கப்பட்டது. எனினும் அவர்களது வருகை திருப்திகரமாக இருந்தது என்று சொல்ல முடியாது.

(தொடரும்...)

## நாம் அனைவரும் இவ்வுலகில் விருந்தினரே



நாம் அனைவரும் இவ்வுலகில் விருந்தினரே நமது இவ்வுலகப் பயணம் நிறைவடைந்ததும், விண்ணகத்தில், உரிமைக் குடிமக்களாக வாழச்செல்வோம் என்ற சொற்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கிய ஒரு வாழ்த்துச் செய்தியில் இடம்பெற்றுள்ளன.

இத்தாலியின் வட பகுதியில், ஆல்ப்ஸ் மலையடிவாரத்தில் அமைந்துள்ள 'போஸே' துறவு மடத்தில், செப்டம்பர் 6 முதல், 9, முடிய நடைபெறும் 25 ஆவது அகில உலக கிறிஸ்தவ ஒன்றிப்பு கருத்தரங்கிற்கு திருத்தந்தை அனுப்பியுள்ள செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆர்த்தடாக்ஸ் சபையினருடன் இணைந்து நடத்தப்படும் இந்த பன்னாட்டுக் கருத்தரங்கிற்கு, "விருந்தோம்பல் என்ற கொடை" என்பது, மையக்கருத்தாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதற்கு, திருத்தந்தை தன் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

போஸே துறவு மடத்தின் தலைவர், சகோதரர் என்ஸோ பியாங்கி (Enzo Bianchi) அவர்களுக்கு திருத்தந்தை அனுப்பியுள்ள இச்செய்தியின் ஆரம்பத்தில், கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆர்த்தடாக்ஸ் சபையின் முதுபெரும் தந்தை, முதலாம் பர்த்தலோமேயு அவர்களுக்கு தன் சிறப்பான வணக்கங்களைத் தெரிவித்துள்ளார்.

இவ்வுலகில் விருந்தினர்களாக வாழும் நாம் அனைவரும், விண்ணகத்தை நோக்கி நம் பார்வையைப் பதித்து மேற்கொள்ளும் இவ்வுலகப் பயணத்தில், நம்முடன் பயணிக்கும் ஏழை, எளியோரையும், துன்புறுவோரையும் கருத்தில்கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

## டெங்கு விழிப்பூட்டல் சிரமதானம்



கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு அரங்கத்தினரும் J/86 முதியோர் சங்கமும் இணைந்து நடாத்திய டெங்கு விழிப்பூட்டல் சிரமதானம் பொதுமக்களுடன் யாழ் மாநகரசபையும் ஒன்றிணைந்து J/86 கார்மல் லேன் மூர் வீதி பகுதியிலுள்ள சகல வீதிகள் வாய்க்கால்கள் துப்பரவு செய்ததுடன் கழிவுகளை அகற்றி தூய்மையாக்கி டெங்குநோய் தவிர்ப்பு விழிப்பூட்டல் சிரமதானத்தை சிறப்புடன் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பதின்ம வயதினரின் உணர்வு மாற்றங்களும் பெற்றோர், வழிகாட்டிகளின் புரிந்துணர்வும்

பதின்ம வயதினர் வாழும் அல்லது வளரும் ஒரு குடும்பத்தில் அப்பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவதற்குள் போதும் என்றாகி விடுகிறது.

பதின்ம வயது வளர்ச்சி என்பது யாருடைய சார்பு இல்லாமல் வளரப் பழகும் ஒரு விடயமாகும். இவ் வளர்ச்சிப்படியில் பிள்ளைகள் புதிய விடயங்களை மேற்கொள்வதும், பெற்றோரின் அருகாமையின்றி வாழ நினைப்பதும், விலகியிருக்க விரும்புவதும் தவிர்க்கமுடியாத விடயமாகும்.

ஆனால் இவர்களின் இச் செயற்பாடு பெற்றோருக்குத் தம்மை எதிர்க்கும் செயலாகவும், அச்சுறுத்தும் செயலாகவும் தெரிகிறது. பெற்றோர்கள் தம் பிள்ளைகள், குழந்தைகளாக இருந்த போது நடத்த விதம் போல பதின்ம வயதுப் பிள்ளைகளை எதிர்பார்ப்பதும், தம் உதவியை நாடி வரவேண்டும் என்று நினைப்பதும் தவறாகும்.

இந்நிலைகளில் பதின்ம வயதுப் பிள்ளைகள் உள்ள வீட்டில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் பிணக்குகள், முரண்பாடுகள், மனக் கசப்புக்கள், மன அழுத்தங்கள் ஏற்படுவது சர்வசாதாரணமானதும் தவிர்க்க முடியாததும் ஆகும்.

ஆயினும் இச்சச்சரவுகள் மனத் தெளிவையும், முதிர்ச்சியையும், புரிந்துணர்வையும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படுத்துவதுடன் ஆரோக்கியமான உறவு நிலை தோன்றவும் வழிசமைக்கும்.

அத்தனை நாள் உங்களுடன் வளர்ந்த பிள்ளைகள் (Teen age) பதின்ம பருவத்தை அடைந்தவுடன் நீங்கள் நினைத்துப்பார்க்காத அளவுக்கு உங்களைக் கோபத்தின் உச்சத்திற்குக் கொண்டு போவார்கள். உங்கள் நம்பிக்கையைச் சிதைத்து இனம் புரியாத மன அழுத்தத்திற்கு உங்களைத்தள்ளி விடவும் கூடும். இதனால் இப்பிள்ளைகளை வளர்ப்பது உங்களுக்குக் கடினமாகத் தென்படலாம்.

பதின்ம வயதுப்பிள்ளைகளுடன் நாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அவர்களிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் மகிழ்ச்சி, சிரிப்பொலி, கும்மாளம், நிறைவு என்பன வேறு எதிலும் கிடைப்பதில்லை. ஏனெனில், இவர்கள் பல விடயங்களைத் தாம் வியக்குமளவுக்கு பிரமாதமாகவே செய்து முடிக்கின்றார்கள்.

சில பெற்றோர் பதின்ம வயதுப்பிள்ளைகளைக் கவனியாது அவர்கள் போக்கில் விடும்போது அல்லது அலட்சியப் போக்குடன் வாழும்போது சிக்கல் ஏதும் எற்படாது. சில வருடங்களின் பின்பு, உங்கள் பிள்ளைகள் திசைமாறிப் பிழையான வழியில் சென்ற பின் தீயபழக்கங்களுக்கு அடிமையான பின், திசைமாறிச் சென்றபின் நீங்கள் (பெற்றோர்) கவலைப்பட்டுபயன் ஏதும் கிடைப்பதில்லை.

டீன் ஏஜ் பிள்ளைகளின் செயலையோ, வார்த்தைகளையோ பெற்றோர் கனமாக (சீரியஸாக) எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இவர்களின் பருவமாற்றம் காரணமாக மனதில் தோன்றுவதை அப்படியே கூறி விடுவார்கள். சிலவேளை, அவர்களது வார்த்தைகள் தம்மைக் காயப்படுத்தும் பதின்ம வயதுப்பிள்ளைகளின் பிரச்சினைகளைக் கையாள வேண்டுமென்றால் பெற்றோர் அவர்களின் வயதுக்கு இறங்கிவர வேண்டும். உங்களின் பிள்ளைகளின் செயல்களைப் பார்த்து பதட்டமடையாமல் பிள்ளைகள் இவ்வாறு செயற்படுவதற்கான காரணத்தை அறிந்து கொஞ்சம் நாசூக்காக நடந்து கொண்டால் போதுமானது.

வண்ணத்துப்பூச்சி கூட்டுப்புழு என்னும் பருவத்திலிருந்து அதிக கஷ்டப்பட்டுக் கூட்டை உடைத்து வெளியே தானாகவே வரும்போதுதான் முழுமையான வண்ணத்துப் பூச்சியாக பரிணமிக்கும். நாம் உதவி செய்யப் போய் அந்தக்கூட்டைக் கொஞ்சம் உடைத்து விட்டால் கூட அந்த வண்ணத்துப்பூச்சி காலம்பூராவும் ஊனமாகவே இருக்கும் என்பது கசப்பான உண்மையாகும்.

இதுபோலவே பதின்ம வயதுப் பிராயமும் குழந்தைப் பருவக் கூட்டைக் கிழித்து பெரிய மனித தோரணைக்குள் நுளையும் காலமாகும். திடீரென உருவாகும் இப்பருவமாற்றம் என்னும் ஆற்றினைக் கடக்க பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள், பெரியோர்கள், பதின்ம வயதுப் பிள்ளைகளுக்கு உதவி புரிவதுடன் அவர்களைப் புரிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

> ❝ உங்களின் அறிவுரையை ஒரேயடியாக நிகழ்த்தவேண்டாம். பதின்ம வயதுப்பிள்ளைகளுக்கு பிடிக்காத விடயங்களில் முதலாவது இந்த அறிவுரையாகும். அவர்கள் போக்கில் சென்று அவர்களுக்கு வழிகாட்டுவதே சிறந்தது. ❞

பதின்ம வயதுப் பிள்ளைகள் தம்மைக் குழந்தைகள் போல் அல்லாமல் பெரியோர் போல நடத்தவேண்டுமெனவும், தமக்கெனப் பொறுப்புக்கள் தரவேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றார்கள். அவர்களுக்கென பொறுப்புகள் ஒப்படைக்கும்போது, தாமும் சமூகத்தில் கவனிக்கப்படுகின்றோம் என்ற உணர்வுடன் தமது பங்களிப்பை பிறரை ஈர்க்கும் வகையில் செய்து முடிக்கும் திறமையும், விருப்பமும் ஏற்படுகிறது. பதின்ம வயதுப்பிள்ளைகள் தமது சக வயதினருடன் இணைந்திருக்கவே விரும்புகின்றார்கள் என்பதனை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

பதின்மவயதில் ஏற்படும் உடல் மாற்றம் (Hormone) ஹோர்மோன் மாற்றம் இவர்களின் மனநிலையில் திடீர் திடீர் மாற்றங்களைக் கொண்டு வருவதுடன் அச்சம், தயக்கம், நேர், எதிர்த்தன்மையான துணிவு, தன்னம்பிக்கை என்பவற்றையும் ஏற்படுத்துகிறது. குடும்பத்தில் எடுக்கப்படும் சிறிய முடிவுகளை பதின்ம வயது பிள்ளைகளி மும் கேட்டு அவர்களது அபிப் பிராயங்களையும் மதியுங்கள். இதனால் இவர்களின் தன்னம்பிக்கை வளரும். பதின்ம வயதினரை அடிக்கடி பாராட்டங்கள். இச் செய்கை சிறிய விடயங்களாயினும் பெற்றோர் பிள்ளைகக்கான இடைவெளியைக் குறைத்து தன்னம்பிக்கையைக் கூட்டுகிறது.

பதின்ம வயதுப்பிள்ளைகள் பதட்டமான பருவத்தைக் கடந்து கொண்டிருக்கையில் பெற்றோரும் தம்முடன் இணைந்து பயணிக்க வேண்டுமென்றே விரும்புவார்கள். இந்த நேரத்தில் நல்ல பழக்கவழக்கங்கள் பற்றியும், தீய செயல்களால் ஏற்படும் விளைவுகள் பற்றியும்சொல்லி அறிவு புகட்டுவது நன்று.

குறிப்பாக மதுப்பாவனை, புகைத்தல், தவறான பாலியல் உறவு என்பவற்றால் ஏற்படும் சிக்கல்கள், நல்ல நட்பு தவிர்க்கப்படவேண்டிய உறவுகள் என்னும் விடயங்கள் பற்றியும் சொல்லிக் கொடுப்பது நன்று.

பணத்தை நேர்மையான வழியில் சம்பாதிக்கவும் பணத்தின் அருமை, மதிப்பு தெரிந்து செலவு செய்யவும், சேமிக்கவும் பதின்ம வயதுப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இணையப் பயன்பாட்டை வகைப்படுத்துவது நல்லது.

பதின்ம வயதினர் கைபேசியிலும், உரையாடல் செய்வதிலும் செலவிடும் நேரம் எல்லாமே அவர்களுக்குக் கெடுதலானது என நாம் எண்ணுவதில் அர்த்தமில்லை. ஆயினும், பெற்றோரின் கண்காணிப்பு இருக்கும் வரை அவர்கள் தவறு செய்ய வாய்ப்புக்கள் குறைவு.

உங்களின் அறிவுரையைஒரேயடியாக நிகழ்த்தவேண்டாம். பதின்ம வயதுப்பிள்ளைகளுக்கு பிடிக்காத விடயங்களில் முதலாவது இந்த அறிவுரையாகும். அவர்கள் போக்கில்சென்று அவர்களுக்கு வழிகாட்டுவதேசிறந்தது. பதின்ம வயதுப் பிள்ளைகளுடன் நீங்கள் மனம்விட்டுப் பேசுங்கள். அவர்களின்பதில்களை நீங்கள் ஏற்றுக்கொள்வது கடினமாகவிருந்தால் அவர்கள் சொல்வதை அப்படியே மௌனமாகக கேட்டுக்கொண்டிருந்தால் கூட நன்மை பயக்கும்.

பெற்றோர், பெரியோர் செய்வது யாவும் எப்போதும் சரி என்று நாம் நினைப்பது தவறு. பதின்ம வயதுப் பிள்ளைகள் ஏளனம் செய்வது பெரும்பாலும் உண்மையாகவும் இருக்கக் கூடும். நாம் சிந்தித்து தவறை ஒப்புக் கொண்டு செயற்படும்போது, பிள்ளைகளின் தவறை நாம் சுட்டிக்காட்டும் போது அவர்களும் தம்மை ஏற்றுக் கொள்வார்கள்.

குடும்ப உறுப்பினர்களை மதிக்கவும், மரியாதையான பேச்சு, நல்ல பழக்கவழக்கங்கள், கலாசார பண்பாடுகள் என்பவற்றையும் கற்றுக் கொடுப்பது பெற்றோரின் முக்கியமான கடமையாகும்.

பதின்ம வயதுப் பிள்ளைகள் பல்வேறுபட்ட சூழலில் வாழவும், வேறுபட்ட மக்களுடன் பழகவும் ஆர்வமுள்ளவர்கள். தமது முந்தைய தலைமுறையினரை விட தற்போதைய இளம் தலைமுறையினர் மனித அனுபவத்தின் பரந்த நிலையை அறியவும், பல்வேறு கலாசாரங்கள் பற்றிய நுண்ணறிவு பெறவும் அதிகம் விருப்பமுடையவர்கள்.

இதனால் இவர்கள் சாதி, மத, இன, நிற, பாலின பேதமின்றி எல்லோரையும் ஒரே கண்ணோட்டத்துடன் ஏற்கும் இயல்பு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அத்துடன் பிறருக்கு



அருட்சகோதரி
றோமலா அன்ரனி (HC)

உதவி செய்ய எமக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று தேடிக்கொண்டிருப்பார்கள். எமது திறமைகளை வெளிப்படுத்த ஒரு மேடை கிடைக்காதா என்ற தவிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருப்பவர்கள். இதனால் நாம் பதின்ம வயதினரைப் புரிந்துகொண்டு அவர்களுக்கான சந்தர்ப்பங்களையும், வாய்ப்புக்களையும் அமைத்துக் கொடுக்க வேண்டும். அதிலிருந்து மீண்டுவர நாம் உதவி செய்ய வேண்டும். பதின்ம வயதுப் பிள்ளைகளிடம் குற்றம் கண்டுபிடிக்காமல் அவர்களின் நடவடிக்கையை திறந்த மனதுடன் அவர்களுடன் சேர்ந்து ஆராய்வதே சிறந்த வழியாகும்.

இன்றைய இளம் சந்ததியினர் தான் நாளைய எமது சமூகத்தின் உறுதியான தூண்களாக மாறுவர் என்பது வெளிப்படையான உண்மை. அவர்களை சமூகத்திற்கு ஏற்றவர்களாகச் சிறந்த மனித ஆளுமையும், விழுமியங்களும் உடையவர்களாக உருவாக்கும் போதுதான் எமது எதிர்கால சமூகம் நாம் எதிர்பார்க்கும் கலாசார விழுமியங்களுடன் தொடர்ந்து நன்மையை நோக்கிப் பயணிக்கும்.

இதற்குரிய அத்திவாரம் எம் இளைய தலைமுறையினரிடையே உறுதியாக அமைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

# காணாமல் போகும் ஆடுகள்

சிறுகதை

ஞானேஸ்வரி

"நீங்கள் ஏமாறாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பலர் என் பெயரை வைத்துக் கொண்டு வந்து நானே அவர் என்றும், காலம் நெருங்கி வந்து விட்டது என்றும் கூறுவார்கள். அவர்கள் பின்னே போகாதிருங்கள்." [லூக் 21:8]

"பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே".... கம்பீரமாகத் திருப்பலியை ஆரம்பித்த குருவானவர் இறைமக்கள் மீது தம் பார்வையைச் சுழல விட்டார். ஆலயத்துக்குள் மக்கள் தொகை குறைவாகவே இருந்தது. பாடசாலை விடுமுறையும் இல்லை.. .அப்படியான காலத்தில்தான் வெளியூருக்கோ... அல்லது சுற்றுலாவுக்கோ செல்வார்கள்... ம்... என்னவாக இருக்கும்... என்று மனதுக்குள் கேள்வியை எழுப்பியபடி அவர் திருப்பலியைத் தொடர்ந்தார். மேலும் சில வாரங்கள் அவர் தொடர்ந்து அவதானித்தபோது இதே நிலையே அங்கு காணப்பட்டது.


சில இளைஞர்களை அழைத்து விசாரித்தார். அதிர்ச்சியான தகவல்கள் பல கிடைத்தன. கத்தோலிக்க திருச்சபைக்குப் புறம்பான சபை வழிபாடுகளில் அவர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள் என்ற செய்தியை அவரால் நம்பவே முடியவில்லை.

அந்தப் பங்கு அந்த மறைமாவட்டத்திலேயே மிகவும் சிறந்த பங்காகக் கருதப்பட்டு வந்தது. இதைச் செய்யுங்கள்... அதைச் செய்யுங்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிடவே தேவையில்லை. இறைமக்களே எல்லாவகையான கோயில் காரியங்களிலும் ஆர்வத்தோடு ஈடுபடுவார்கள். கோயில் பளிச் என்று எப்போதும் சுத்தமாகவே இருக்கும். ஒவ்வொருசனிக்கிழமையும் பெண்கள் வந்து கோயிலைக் கழுவிச் சுத்தம் செய்வார்கள். குருவானவரின் வாக்கு வேதவாக்காக இருந்தது அவர்களுக்கு. திருப்பலியானாலும், செப வழிபாடுகளானாலும், சமயக் கருத்தரங்குகளானாலும் பங்கு மக்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு அரை மணி முன்னதாகவே வந்து விடுவார்கள். நற்கருணைக் கோயிலுக்குள் எப்போதும் கூட்டம் குறையாமல் இருக்கும். நிழல் மரங்களும், விதம் விதமான மலர்ச் செடிகளும் சூழ்ந்து ஆலயம் அழகும் அமைதியும் கொண்டு விளங்கும்படி மக்கள் தாங்களாகவே முன்வந்து செய்வார்கள். நிதி உதவி செய்வதிலும் தாராளமாகவே இருப்பார்கள்.

அப்படிப்பட்ட பங்கு சிதைந்து போக ஒரு நாளும் விடக்கூடாது. எங்கு என்ன பிரச்சினையோ அதைக் கண்டு பிடித்து சரி செய்து விட்டால் எல்லாம் சரியாகும் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார். இந்தப் பிரச்சினையை எப்படி அணுகுவது என்று அவருக்குப் புரியவில்லை. தம்மில் ஏதாவது குறைகள் இருந்தால்கூட அதைத் திருத்திக் கொள்ளத் தயாராக இருந்தார்.

ஒரு நள்ளிரவு நேரம். பாதர் டேவிட் தூக்கம் வராமல் புரண்டு கொண்டே இருந்தார். போத்தலிலிருந்து தண்ணீரை டம்ளரில் ஊற்றி மடக் மடக் என்று குடித்து விட்டு வெளி வாசலுக்கு வந்து சற்று நேரம் ஆலயத்தையும் வளவையும் பார்த்தார். நிலவின் ஒளியில் குளித்துக் கொண்டிருந்த தேவாலயம் மிகவும் அழகாகத் தெரிந்தது. வகை வகையான மலர்ச் செடிகளிலிருந்து கம்மென்ற இனிய நறுமணம் எங்கும் சூழ்ந்து தென்றலில் தவழ்ந்து வந்தது. இளங் குளிர்காற்று உடலைச் சிலிர்க்க வைக்க சிறிது நேரம் அப்படியே நின்று அந்த ரம்மியமான சூழலை ரசித்து விட்டு மெல்ல நற்கருணை ஆலயத்தை நோக்கி நடந்தார்.

நற்கருணையில் மக்களுக்காகக் காத்திருக்கும் ஆண்டவர் இயேசு முன்பாக அவர் முகம் குப்புற விழுந்து



அந்த நள்ளிரவு வேளையில் தமது பங்குக்காக வேண்டினார். எப்பொழுதெல்லாம் மனம் சரியில்லையோ அல்லது தமது பணியில் அழுத்தங்கள் கூடி முடிவு எடுக்க முடியாத தருணங்களில் எல்லாம் அவர் நற்கருணை ஆண்டவரிடமே சரணடைவார்.

பின்னர் வந்த நாட்களில் இறைமக்கள் சிலருடன் பேச்சுக் கொடுத்ததில் அவர்கள் உள்ளுணர்வு புரிந்தது. "கத்தோலிக்க திருச்சபையில் வேதாகம விளக்கம் குறைவு. வாரத்தில் ஒரு பிரசங்கம் மட்டுமே.... பொது நிலையினர் செபிக்கவோ பாடவோ வாய்ப்புகள் இல்லை..... குறிப்பிட்ட ஒரு சிலருக்கே அந்த வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றன. மேலும், கத்தோலிக்க சபையில் போட்டி பொறாமைகளும் சாதி வேறுபாடுகளும் நாற்றமடிக்கின்றன. அற்புதங்கள் எதுவும் நடப்பதில்லை.....

ஆனால் சபைகளில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை... முக்கியமாக தூய ஆவியானவரின் அருட்பொழிவு வழிந்து ஓடுகிறது.... யாரும் பாடலாம் யாரும் செபிக்கலாம்... இப்படியான காரணங்களை அடுக்கிக் கொண்டே போனார்கள். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட குருவானவர் அந்நிய சபைகளைத் தேடிப் போகாத அளவுக்கு பங்கில் பாரிய மாற்றம் அவசியம் என்பதை உணர்ந்தவராக தமக்குள்ளேயே பல திட்டங்களை வகுத்துக் கொண்டார்.

அதன் விளைவு.....பாடகர் குழாமில் குறிப்பிட்ட ஒரு சிலரே பாடிக் கொண்டிருக்காமல் அவர்களோடு இணைந்து பாடுவதற்காக இனிய குரல் வளம் கொண்ட இளைஞர்களும், யுவதிகளும் ஏன்... ஆர்வமுள்ள பெரியவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சிலர் முணுமுணுத்தாலும் அதையெல்லாம் அவர் கண்டு கொள்ளவில்லை.

ஒவ்வொரு முதற் சனிக்கிழமையும் உபவாசமும் நற்கருணை ஆராதனையும் ஆரம்பிக்கப்பட்டு இறைமக்கள் தாராளமாக செபிக்கவும் பாடவும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

ஒவ்வொரு வட்டாரத்திலும் செபக் குழுக்களை ஏற்படுத்தினார். இவர்கள் வட்டாரங்களில் ஒன்றுகூடிச் செபிக்கலாம். முக்கியமான விடயம்... இந்தச் செபக் குழுக்கள் தங்கள் இஷ்டப்படி இயங்க முடியாது. குருவானவரின் தலைமையின் கீழ் அவருடைய அனுமதியோடும் ஆசீரோடும் தான் செயற்பட வேண்டும்.

திருப்பலிக்கு வரும்போது அனைவரும் திரு விவிலியத்தைக் கட்டாயமாகக் கொண்டு வர வேண்டும் என்று பணிக்கப்பட்டனர்.

குருவானவரின் செயற்பாடுகளைக் கண்டு திகைத்துப் போன இறைமக்களை அழைத்து. அவர்களோடு மனம் விட்டு உரையாடினார். "நீங்க ஆளாளுக்கு கண்டபடி பேசி விமர்சனம் பண்றது எல்லாமே எனக்குத் தெரியும். விமர்சனம் என்கிறது ஒரு நல்ல விசயந்தான். ஆனா விமர்சனம் பண்றது ஒருவரோட வாழ்க்கையை அழிக்கிறதாகவோ தூற்றுவதாகவோ இருக்கக் கூடாது. அவரை ஊக்குவிப்பதாகவும், தனது தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்னேறுவதற்கு ஒரு ஊன்றுகோலாகவும் மட்டுமே இருக்க வேண்டும்.

தயவு செய்து எது பேசினாலும் என்கிட்ட வந்து நேரடியாகப் பேசுங்க... நானும் உங்கள்ல ஒருத்தன்தான். உங்க குடும்பத்தில கணவன் மனைவிக்கிடையில பிரச்சினைகள் வர்றதில்லையா?..... அல்லது பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில கருத்து வேறுபாடுகள் வர்றதில்லையா?..... அப்பிடி வர்ற நேரம் வீட்டை விட்டு. குடும்பத்தை விட்டு ஓடிப் போறீங்களா.. கணவனோ... மனைவியோ சரியில்லன்னா... அவங்கள விட்டிட்டு வேற யாரோடேயும் போயிருவீங்களா?...... சொல்லுங்க... என்னைப் பொறுத்தவரையில சபை விட்டு சபை மாறுபவர்கள் விசுவாசம் இல்லாதவர்கள். அவங்க எங்க போனாலும் எதிலும் நிலைச்சி நிற்க மாட்டாங்க.... உங்க இஷ்டப்படி நினைச்ச நேரம் உதறிட்டுப் போறதுக்கும்... அப்புறம் திரும்பி வாறதுக்கும் இது உங்க வீடு கிடையாது. பரிசுத்த சபை... அதை முதல்ல புரிஞ்சி கொள்ளுங்க." குருவானவருக்குக் கோபம் வரும் என்பதை அன்றுதான் கண்டார்கள்.

சில மாதங்களின் பின்னர் வந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை "தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே ..." என்று பூசையை ஆரம்பித்தபோது "ஆமென்..." என்று கோயிலை நிறைத்துக் கொண்டு வந்த மக்களின் குரலில் அவர் மகிழ்ந்தவராக பார்வையைப் படர விட்டார். ஆலயம் கொள்ளாத அளவுக்கு மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது.

இப்போது அந்தப் பங்கின் செபக் குழுக்கள் வேறு பங்குகளுக்கும் சென்று பணி செய்யும் அளவுக்கு பக்தியிலும், தூய ஆவியின் அருள்பொழிவிலும் நிறைந்திருந்தன. மக்கள் முன்பை விட அதிக ஆர்வத்துடன் பங்குக் கடமைகளில் ஈடுபடுவது மனதுக்கு நிறைவாக இருக்கிறது.

ஒவ்வொரு முதற் சனிக்கிழமையும் ஆற்றல் மிக்க குருக்கள் நடாத்தும் பக்தி வழிந்தோடும் வேதாகம ஆராதனைக்கு பிற பங்கிலிருந்தும் விசுவாசிகள் வரத் தொடங்கியுள்ளனர். விலக்கப்பட்ட சபைகளுக்குப் போனவர்கள் அனைவரும் திரும்பி வந்து பங்குத் தந்தையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

எல்லாவற்றுக்கும் காரணம் நற்கருணை ஆண்டவர். "மக்களோடு மனம் திறந்து பேசு" என்று காட்டிய வழிதான்... நன்றியோடு நினைத்துக் கொண்டு சந்தோசமாக அவர் பூசையைத் தொடர்ந்தார்.

## யாழ். போதனா வைத்தியசாலை தூய ஆரோக்கிய அன்னை திருவிழா

யாழ். போதனா வைத்தியசாலையில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தூய ஆரோக்கிய அன்னையின் வருடாந்தத் திருவிழாவானது 21.09.2017 அன்று மாலை 4.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 22, 23 ஆகிய தினங்களில் மணிக்குத் திருச் செபமாலையும் திருப்பலியும் இடம்பெறும். திருநாள் திருப்பலி 24.09.2017 காலை 7.00 மணிக்கு எமது ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும்.


## விண்ணக வாழ்வின் 1 ம் ஆண்டு நினைவாக

மண்ணில் 04 . 05 . 1946



விண்ணில் 24 . 08 . 2016

அருட்சகோதரி சன்றா
Rev.Sr. Zandra (A.C)

(ஓய்வுபெற்ற யாழ். பரியோவான் கல்லூரி, கொழும்பு புனித பெனடிக் கல்லூரி ஆசிரியர்)

**"நான் வேண்டுவதும் ஒன்றே, விரும்புவதும் ஒன்றே
நான் ஆண்டவன் இல்லத்திலே வாழ்ந்திட வேண்டும்"**

"உயிருள்ளவரை எம்மை நேசித்தீர்
இறந்த பின்பும் உம்மை நாம் மறவோம்"

AD/80

அன்புடன் குடும்பத்தினர்


## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்த சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓர் அடியாள்


## முதலாம் வருட நினைவு

மண்ணில் 11 . 12 . 1965



விண்ணில் 14 . 09 . 2016

அமரர் பென்யமின் சாமுவேல் அரியராசா

இரக்கம் நிறைந்த இறைவா திருமுழுக்கின் வழியாக உமது பிள்ளையாகத் தெரிந்துகொண்ட அமரர் பென்யமின் சாமுவேல் அரியராசா எனும் அடியான் தாம் வாழ்ந்த காலத்தில் தெரிந்தும், தெரியாமலும் கட்டிக்கொண்ட பாவங்களை மன்னித்து உமது பேரின்ப வீட்டில் நித்தம் புகழ்பாடச் செய்வீராக.

**அன்புடன் நினைவுகூரும்மனைவி அனிரா, சகோதரி ஜெறல்டின் அரியராசா, சகோதரி சாந்தி மூர்த்தி குடும்பத்தினர், சகோதரி மனோ சிவராஜ் குடும்பத்தினர், குயின்ரின் அன்ரி, ரெரன்ஸ் குடும்பத்தினர்.**

AD/83



90ஆவது பிறந்த தின நினைவு

மேரி (மலர்) மார்செல்லா
கொன்ஸ்ரன்ரைன் மரியரட்ணம்

பிறப்பு: புரட்டாசி 16, 1927

வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்; இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம். ஆகவே, வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம்
உ.ரோமையர் 14:8

அன்புடன் நினைவு கூரும்

கணவர்:
*R. C.* மரியரட்ணம்

மகன்மார்:
அருட்திரு ஜூட் ஜோசப் ஜோய் மரியரட்ணம் *CMF*
அருட்திரு ஜூலியன் நேரியஸ் றோய் மரியரட்ணம் *OFM*

உற்றார், உறவினர், நண்பர்கள்.

336/252 பேஸ்லைன் வீதி, கட்டுவ, நீர்கொழும்பு, இலங்கை.
031-2226722 / 0115-764611


## எதிர்ப்பதா? எதிர்கொள்வதா?

முதுமை என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் ஒரு பருவம். பெரும் விபத்துக்களைச் சந்திக்காதவர்கள் எல்லாரும் சந்தித்தாக வேண்டிய பருவம். ஆனாலும் நமக்கெல்லாம் முதுமையை நினைத்தாலே நடுக்கம் வருகிறது? முதியோர் பலரும் இன்று திகைத்து நிற்கிறார்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

மேலை நாடுகளில் முதியவர்கள் ஏராளமாக இருக்கிறர்கள். தனியாக மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். ஜப்பானில் முதியவர்களுக்குப் பஞ்சமே இல்லை.வளமான நாடுகளில் முதியவர்களுக்கு ஏராளமான சமூகப் பாதுகாப்பு இருக்கிறது அந்த அளவுக்கு நம் நாட்டில் அரசுப் பாதுகாப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது உண்மைதான்.

ஆனால், நம் நாட்டில் அரசின் ஓய்வூதியம் பெறும் பெற்றோர்கள்கூட மகிழ்ச்சியாக இல்லையே! ஏன்? நாம் இளமையிலேயே முதுமைவரும் என் பதை எதிர்கொள்ளத் தயங்குகிறோமா? அதற்காகத் திட்டமிட மறந்து விடுகிறோமா?

நம்முடைய இளமைக்கால வாழ்க்கை பழக்கங்கள் நமது முதுமைக்கால உடல் நிலைமையைப் பாதிக்கும் என்பதை உணர்ந்துகொள்ள மறுக்கிறோமா? கூட்டுக் குடும்பங்கள் சிதைகின்றன என்பதை உணர மறுக்கிறோமா? குழந்தைகளுக்காக நம்முடைய பொருளாதாரத்தைப் பாதுகாப்பை விட்டுக்கொடுக்கிறோமா? அதனால் பின்னாளில் அவதிப்படுகிறோமா?

நம் குழந்தைகள் என்றென்றும் நமது கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோமா? முதுமையிலும் இளமையாக உயிர்த்துடிப்போடு வாழமுடியும்! அப்படி வாழ்ந்து வருபவர்கள் ஏராளம் அவர்களைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களும் ஏராளம். மேலைநாடுகளிலும் நம் நாட்டிலும், முதுமையை எதிர்கொள்வது எப்படி? முதுமையை வென்று என்றும் இளமைத் துடிப்போடு வாழ்வது எப்படி என்பது பற்றி ஏராளமாகச் சிந்திக்கிறார்கள்.


## விண்ணக வாழ்வின் 1 ம் ஆண்டு நினைவாக



**இரக்கமுள்ள ஆண்டவரே!
திருமுழுக்கின் வழியாக
கிறிஸ்தவளாக அழைக்கப்பட்டு
அருட்கொடைகளைப் பெற்று
உன்னத வாழ்வு வாழ்ந்து
உம் பாதம் அழைக்கப்பட்ட
எம் தாயை புனிதர்களின்
தோழமையுள்ள உறவில்
பங்குபெறச் செய்தருளும் - ஆமென்**

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 18.09.2017 திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு தூய மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**யோசப் ஆனாச்சி பாக்கியம்**

"விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை"

மண்ணில் 05.11.1924

விண்ணில் 18.09.2016

AD/85

இவரின் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16 . 05 . 1936



விண்ணில் 11 . 09 . 2015

**திரேசம்மா அந்தோனிப்பிள்ளை**

(சட்டத்தரணி T.A. அந்தோனிப்பிள்ளையின் மனைவி)

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்..."

847, கடற்கரை வீதி,
பாசையூர், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்
சகோதரர்கள், உறவினர்

AD/81


## வெளிவந்துவிட்டது

இலங்கைத் திருத்தூதர் தூய யோசவ் வாஸ் வாழ்வும்பணியும் என்னும் நூல் நான்காம் பதிப்பு வெளிவந்துவிட்டது. ஆசிரியர் எஸ்.ஜி.பெரேரா யே.ச. நூலில் தமிழ் மொழி பெயர்ப்பின் பதிப்பாசிரியராகிய அருட்பணி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் அடிகளார் வெளியிட்ட இந்நூலில் நான்காம் பதிப்பு விற்பனைக்காக வெளி வந்து விட்டது.

இப்பிரதிகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



எழுதுமட்டுவாளில் திருச்சிலுவைக் கன்னியர் மடத்தின் புதிய கட்டடத் தொகுதியொன்று அமைக்கப்பட்டு யாழ். ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் கடந்த 31.08.2017 அன்று ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் திருச்சிலுவைக் கன்னியர் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி எஸ்.கிளேயா அவர்களும் சபையின் சகோதரிகளும் கலந்து சிறப்பித்தனர்.



பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்தில் 31.08.2017 அன்று மாலை 5.00 மணிக்கு அப்பங்கைச் சேர்ந்த 96 மாணவர்களுக்கு யாழ். ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது.

## நந்தார் அஞ்சல் முத்திரைக்கான சித்திரப்போட்டி - 2017

மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சின் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் மேற்படி சித்திரப்போட்டி இரண்டு குழுக்களாக இரண்டு தலைப்புக்களில் நடாத்தப்படவுள்ளது.

"கிறிஸ்து பிறப்பு அன்பின் ஆரம்பம்" என்னும் தலைப்பு முதலாவது குழுவுக்கும் (10 வயதுக்கும் குறைந்த மற்றும் 11- 15 வயதுக்கும் இடைப்பட்ட) "சமாரித்தன் கிறிஸ்து பிறப்பு" என்னும் தலைப்பு இரண்டாவது குழுவுக்கும் (16-21 வயதுக்கு இடைப்பட்ட மற்றும் 21 வயதுக்கு மேல்) வழங்கப்பட்டுள்ளது.

வெற்றியாளர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என இத்திணைக்களம் அறிவித்துள்ளது.



கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் உள்ள பூநகரி தூய அடைக்கலமாதா ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பங்குப் பணிமனையை யாழ். ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கடந்த 30.08.2017 அன்று ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார். இப் புதிய பங்குப்பணிமனையானது ஆயரின் நேரடி முயற்சியினால் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## கணனியில் தூய அன்னை தெரேசா பற்றிய நூல்




அன்னை தெரேசா புனிதராக அறிவிக்கப்பட்டு ஓராண்டுநிறைவுறுவதை யொட்டியும், அவர் இறை யடிசேர்ந்து20ஆண்டுகள் நிறைவுறுவதை யொட்டியும், அன்னை தெரேசா குறித்து, கணனி வழி வாசிக்க உதவும் நூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

செப்டம்பர் மாதம் 4ம் திகதி, அன்னை தெரேசா, புனிதராக உயர்த்தப்பட்டதன் ஓராண்டு நிறைவும், செப்டம்பர் 5ம் திகதி, அன்னை தெரேசா இறந்ததன் 20ம் ஆண்டு நிறைவும் நினைவு கூரப்படுவதையொட்டி, 'அன்பு கூரப்படாதவர்களை நாம் அன்பு கூர்வோம்' என்ற தலைப்பில், கணனி வழிபயன்பாட்டிற்கான டிஜிட்டல் நூல் ஒன்று வெளியிடப்பவுள்ளது.

## சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல திருவிழா திகதி மாற்றம்

சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய வருடாந்தத் திருவிழா இம்முறை புரட்டாதி மாதம் 23 ஆம் திகதி சனிக் கிழமை கொண்டாடப்படவுள்ளதாக திருத் தலப்பரிபாலகர்அருட்பணிA.F.லொஷிங் ரன் அமதி அடிகளார் பாதுகாவலனுக்குத் தெரிவித்தார். இத் திருவிழாத் திருப்பலி யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

வழிபாட்டு நாட்காட்டியில்குறிப் பிடப்பட்ட திகதியில் மாற்றம் செய்யப் பட்டு புரட்டாதி 14 ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பித்து திருவிழாத் திருப்பலி 23 ஆம் திகதி நடைபெற வுள்ளது.



அமதிபுரம் அக்கராயன் பங்கிற்கு புதிய பங்குத்தந்தையாக அருட்திரு செபஸ்ரியன் றெவல் அமதி அவர்கள் யாழ் ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த மூன்று வருடங்களாக (2014-2017) அமதிபுரம். அக்கராயன் பங்கில் அரும்பணியாற்றிய அருட்தந்தை ஜோண் பற்றிக் அமதி அவர்கள் மாற்றலாகி . வவுனியா வைத்தியசாலை ஆன்மீகக் குருவாகச் செல்வதினாலேயே இப்புதிய நியமனம் வழங்கப்பட்டது. கிளிநொச்சிமறைக்கோட்ட முதல்வர் அருட்பணி பேனாட் றெக்னோ, அமதிகளின் யாழ் மாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அமதி முன்னிலையில் புதிய பங்குத்தந்தை முன்னைநாள் பங்குத்தந்தையிடமிருந்து பணிப்பொறுப்பு ஏற்பதைப் படத்தில் காணலாம்.

## குறிப்பிட்ட சமூக தொடர்பு....

(01ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயம் மட்டில் நமது கவலையையும், வெறுப்பையும் எடுத்தியம்பும் அதேவேளை, எந்த சமய ஸ்தாபகர்களையும் இவ்வாறு அநீதியான முறை யில் அவமதியாது இருக்க உறுதிமொழி கூறுமாறு அதிகாரப் பதவியிலிருப்போரை வேண்டுகின்றோம்.

அதேவேளை உலகம்சார் அனைத்து அமைப்புக்களும் குறிப்பாக சமூகத்தொடர்பு சாதன அமைப்புக்கள் புதுப்பிக்கப் பெற்று மனிதகுலத்தின் நலன்களுக்காக செயற்பட மன்றாடும்படி விசுவாசிகளை அழைக் கின்றோம் என இவ் அறிக்கை அமைகின்றது.

## வில்லா விசென்சியோவில் திருத்தந்தை

(01ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வியாழனன்று, தலைநகர் பொகோட்டாவில் பயண நிகழ்வுகளை நிறைவுசெய்து, இவ்வெள்ளி கொலம்பிய நேரம் காலை 7.20 மணிக்கு, தான் தங்கியிருந்த பொகோட்டா திருப்பீடத் தூதரகத்திலிருந்து அந்நகர் விமான நிலையத்திற்குக் காரில் புறப்பட்டார்.

விமான நிலையத்தில், காவல்துறையினர், இராணுவத்தினர், அரசு அதிகாரிகள் என ஏறத்தாழ நானூறு பேர் திருத்தந்தையை வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

அங்கிருந்து, நாற்பது நிமிடங்கள் விமானப் பயணம் செய்து, வில்லாவிசென்சியோ நகர் விமான நிலையத்தை அடைந்தார். கொலம்பியாவின் வர்த்தக மற்றும் தொழிற்சாலை நகரமான வில்லாவிசென்சி

யோவில், இறையடியார்கள் Arauca ஆயர், ஹேசுஸ் எமிலியோ ஹாரமில்லோ மொன்சால்வே, மறை மாவட்டஅருட்பணியாளர் பேத்ரோ மரியாரமிரெஸ்ராமோஸ் ஆகிய இருவரையும் அரு ளாளர்களாக அறிவிக்கும் திருப்பலியை நிறைவேற்றுதல், தேசிய ஒப்புரவுக்கான மாபெரும் சந்திப்பு, அந்நகரின் ஒப்புரவு திருச்சிலுவையின் முன் செபித்தல், மீண்டும் பொகோட்டா செல் தல் ஆகியவை திருத்தந்தையின் பயணத்திட்டத்தில் குறிக்கப்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.